**இலங்கை சுங்கத்தின் சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் - 2016**

---

இலங்கை சுங்கத்தின் சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. திணைக்களத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளிளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை சுங்கத்தின் சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் பிரகாரம், நிறுவனமொன்றின் சொத்துக்கள் அந்த நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்ட வேண்டியிருந்ததுடன் நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அந்த சொத்துக்கள் பயன்பாடுடையதாக இருக்க வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையல்லாச் சொத்துக்களின் இழிவுப் பெறுமதி ரூபா 111,881,167 ஆக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்கள் நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படாமல் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், இந்த சொத்துக்களுக்குரியதான மீளாய்வாண்டின் பெறமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 30,807,693 தொகை நிதியத்தின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 21(உ) இன் பிரகாரம், நிறுவனமொன்று அங்கீகரித்த பாதீடொன்று விநியோகிக்கப்பட்டிருக்குமாயின் மேலதிக நிதிக்கூற்றொன்றாக பாதீடு செய்யப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும் இடையே ஒப்பீடொன்று அல்லது நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தொகை தனிப்பட்ட நிரலில் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் நிதிநிலமைக்கூற்றில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 13 ஆவது பந்தியின் பிரகாரம், ரூபா 500,000 தொகையான கணனி மென்பொருள் கற்பனைச் சொத்தாக வேறாக வகைப்படுத்தப்படாமல் கணனி துணைப்பாகங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 69 ஆவது பந்தியின் பிரகாரம், சொத்தொன்றை பெறுமானத்தேய்வு செய்வதற்கு உரிய சொத்தை பயன்படுத்துவதற்காக தயார்செய்யப்பட்ட நிலைக்குக் கொண்டு வந்ததன் பின்னர் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு இணங்காத வகையில் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் பெறுமானத்தேய்வு செய்தல் நிறுவனத்தின் கொள்கையாக இருந்ததாக நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஆலோசனைகளுக்கு இணங்காத வகையில் பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 15,682,137 அதிகமாகவும், நடைமுறையல்லாச் சொத்துக்களின் இழிவுப் பெறுமதி அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு கொள்கை

நிதியத்திற்கான வருமானத்தை இனங்காண்பதற்காக நியாயமான கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 11 சுங்கப் புலனாய்வு கோவைகளுக்குரிய நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 25,403,067 தொகை கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்ததுடன் 39 புலனாய்வுக் கோவைகளுக்குரிய இந்த நிதியத்தின் வருமானம் ரூபா 38,257,023 இனால் குறைவாகவும், ரூபா 28,307,806 இனால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை சுங்கம் மற்றும் இந்த நிதியத்தின் பாவனைக்காக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,618,928 பெறுமதியான காகிதாதிகளில் நிதியத்தின் நடவடிக்கைகளுக்காக உரித்தான காகிதாதிகளின் கிரயம் மற்றும் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட இருப்பின் கிரயம் என்பன தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாமல் முழுக்கிரயமும் நிதியத்தின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மாதாந்த வாடகையின் அடிப்படையில் பெறப்பட்ட 02 வாகனங்களுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 182,397 தொகை வெளிநாட்டு பயிற்சி செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 255,439 தொகை வெளிநாட்டு பயிற்சி செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், வெளிநாட்டு பிரயாணத்திற்காகச் செலுத்தப்பட்ட சீதோசன ஆடைப் படிகளின் கூட்டுத்தொகையான ரூபா 42,832 உள்நாட்டு பயிற்சிச் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், வாகன வாடகைச் செலவினம் ரூபா 371,367 தொகை பதாதை பொருத்தும் செலவினமாக விரிவான வருமானக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்களின் பராமரிப்பிற்காகச் செலவிடப்பட்ட ரூபா 11,332,185 தொகை சொத்துக் கொள்வனவாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நடைமுறையல்லாச் சொத்துக்களின் கிரயம் அந்த அளவால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இயந்திரம் மற்றும் அலுவலன

உபகரணங்களின் பராமரிப்புச் செலவினம் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதியான ரூபா 7,058,000 தொகை கணனி, துணைப்பாகங்களின் கீழ் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக, மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 2,031,379 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) இலங்கை சுங்கம் மற்றும் முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்தின் உள்ளக பேரேட்டு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்காக கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(எ) 2016 ஒக்தோபர் மாதத்திற்குரிய பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்படாத பரிசுப் பெறுமதி ரூபா 720,114 தொகை வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 567,550 பெறுமதியான நூலகப் புத்தகங்கள், ரூபா 1,851,696 பெறுமதியான துணைப்பாகங்களும் பொருத்திகளும், ரூபா 468,000 பெறுமதியான தொலைக்காட்சி இயந்திரம் என்பவற்றின் கிரயம் மற்றும் அந்த சொத்துக்களுக்குரிய கூட்டுப்பெறுமதி ரூபா 467,952 ஆன பெறுமானத்தேய்வு என்பன கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியளவில் புலனாய்வு நடவடிக்கைகள் முடிவடைந்திருந்த 81 சம்பவக் கோவைகளுக்குரியதாக விதிக்கப்பட்டிருந்த தண்டப்பணமான ரூபா 1,597,390,932 இல் நிதியத்தின் 20 சதவீத பங்களிப்புப் பணமான ரூபா 319,478,186 தொகை நிதியத்தின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், காசு அடிப்படை பின்பற்றப்பட்டமை அதற்கான காரணமாக இருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய சுங்க உத்தியோகத்தர்களின் பரிசு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 2,366,174,629 தொகையிலிருந்து 40 சதவீதம் அதாவது ரூபா 946,469,851 தொகை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த நிதியத்தில் ரூபா 936,815,186 தொகையே செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ரூபா 9,654,665 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் அவ்வேறுபாட்டிற்கு போதியளவான காரணங்கள் விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம் பெறுமானத்தேய்வு பெறுமதிக்கும் பேரேட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிக்கும் இடையே ரூபா 2,195,431 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன், அதற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் மூன்று மாதங்களுக்குரிய விரிவான வருமானக் கூற்றில் தண்டப்பண வருமானத்திற்கும் அதற்குரிய பட்டோலைக்கும் இடையே ரூபா 9,222,650 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) திரண்ட நிதியத்திற்குரிய திறைசேரி புத்தகங்களின் பிரகாரமும், திணைக்கள புத்தகங்களின் பிரகாரமும் ஆண்டின் ஆரம்பத்தின் போதும், ஆண்டின் இறுதியின் போதும் முறையே ரூபா 91,221,893 மற்றும் ரூபா 111,308,874 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட உரிமை மாற்றங்கள் கூற்றில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியத்தின் பெறுமதி ரூபா 4,731,374,550 ஆக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், 2016 சனவரி 01 ஆந் திகதி முன்கொண்டு வரப்பட்ட மீதி 4,731,468,150 ஆனமையால் ரூபா 93,600 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஊ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீண்டெழும் செலவினம் ரூபா 179,115,489 ஆக இருந்த போதிலும், செலவினப் பட்டோலையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 178,785,310 ஆனமையால் ரூபா 330,179 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட நாட்குறிப்புப் பதிவுகள் மற்றும் முன்னைய ஆண்டு சீராக்கம் ரூபா 38,321,939 இற்குரிய ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவற்றை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிதியத்தின் செயற்பாட்டு மிகை ரூபா 727,612,118 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 450,789,616 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 276,822,502 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 116,355,742 இனால் உயர்வடைந்திருந்த போதிலும், நிதியத்தின் வருமானம் ரூபா 348,749,758 இனால் உயர்வடைந்து சென்றமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கான னாரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டில் ரூபா 5,385,778 தொகையான உள்நாட்டுப் பயிற்சிச் செலவினம் மீளாய்வாண்டின் போது ரூபா 18,832,173 வரை 250 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. சுங்க காவலர்களுக்காக கிளிநொச்சியில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிச் செயற்திட்டத்திற்காக ரூபா 7,033,636 தொகையான செலவினமொன்று செய்யப்பட்டமை, பூகோள விஞ்ஞானிகளின் சங்கத்தின் மூலம் நடாத்தப்பட்ட டிப்ளோமா பாடநெறிக்காக ரூபா 3,524,150 செலவினம் மேற்கொண்டமை மற்றும் புதிய சுங்க காவலாளிகளினதும் உதவிச் சுங்க அதிகாரிகளினதும் ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சை செலவினத்திற்காக ரூபா 3,833,116 செலவிடப்பட்டிருந்தமை போன்ற காரணங்களினால் உள்நாட்டு பயிற்சி செலவினம் அசாதாரணமாக மேல்நோக்கி செல்வதற்கான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பல்வேறு அங்கத்தவர்களுக்காக விதிக்கப்பட்ட தண்டப்பணம் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற பணத்தில் 20 சதவீதத்திற்குச் சமமான தொகையொன்று இந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(ஆ) 1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் பணிகள் பின்வருமாறு இருந்தது.

- சுங்க முகாமைத்துவத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு தேவைப்படுகின்ற வசதிகளை வழங்குவதற்காக செலவினங்களைச் செய்தல்.
- நிரந்தரமாக அல்லது பூரணமாக அல்லது பகுதி அளவில் வலுவிழக்கின்ற அல்லது தற்காலிகமாக செயலிழக்கின்ற எந்தவொரு சுங்க உத்தியோகத்தருக்கும் இழப்பீடு செலுத்துதல்.
- எந்தவொரு சுங்க உத்தியோகத்தரும் மரணமடைகின்ற போது அவரது சட்டரீதியான உரித்தாளிக்கு இழப்பீடு செலுத்துதல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், பல வருட காலமாக இழப்பீட்டு நிதியத்திற்கு பணம் செலவு வைக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிதியத்தின் திரண்ட மீதி ரூபா 5,420 மில்லியனாக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டின் மீதியை விட ரூபா 689 மில்லியன் அதாவது 15 சதவீத அதிகரிப்பாகும். மேலும், மீளாய்வாண்டிற்குரிய நிதியத்தின் வருமானம் ரூபா 936 மில்லியனாக இருந்த போதிலும், நிதியத்தின் அடிப்படை நோக்கங்களுக்காகச் செலவிட்ட பணம் அண்ணளவாக ரூபா 107 மில்லியன் அளவாக இருந்தது. அதன் பிரகாரம் நிதியத்திற்காக தொடர்ச்சியாக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், முறையான எதிர்வு கூறலுடனும் கவனத்துடனும் அந்த நிதியம், நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், நிதியத்தின் திரண்ட மீதியில் தொடர்ச்சியான அதிகரிப்பிற்காக பின்வரும் காரணங்களும் அடிப்படையாகத் தாக்கமளித்திருந்தது.

(i) சுங்கவரி மோசடிகளைக் கட்டுப்படுத்துவதற்காக போதியளவான நடவடிக்கைகள் பின்பற்றப்படாமையின் காரணமாக முன்னைய 05 ஆண்டு காலத்தில் நிதியத்திற்கு பணம் கிடைத்த சுங்க புலனாய்வு எண்ணிக்கை மற்றும் சுங்கத் தவறுகளின் நிதிரீதியான பெறுமதி என்பன கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் உயர்வடைந்திருந்தமை.

| ஆண்டு | வேலை பூர்த்தி செய்யப்பட்ட புலனாய்வுகளின் எண்ணிக்கை | சுங்கத் தவறுகளின் நிதி ரீதியான பெறுமதியில் நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட பண அளவு |
|---|---|---|
| | | ரூபா |
| 2012 | 183 | 362,419,680 |
| 2013 | 200 | 592,887,505 |
| 2014 | 258 | 516,223,741 |
| 2015 | 296 | 588,065,427 |
| 2016 | 267 | 936,815,186 |

(ii) சுங்கத் தவறுக்காக தண்டனைகளை விதிக்கும் போது இழக்கப்பட்ட அரசாங்கத்தின் வரி வருமானமும் அந்தத் தண்டப்பணத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டமையின் காரணமாக உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட பரிசுப் பணத்தின் அளவு உயர்வடைந்ததுடன் இந்த நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியத்தின் அளவும் அதிகரித்துச் சென்றமை அவதானிக்கப்பட்டது.

(iii) தற்போது காணப்படுகின்ற சுதந்திர பொருளாதார கொள்கையின் காரணமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளில் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் சுங்க கட்டளைச் சட்டம் மற்றும் உரிய நிதியங்களில் சட்டரீதியான ஏற்பாடுகளை முறையாகவும் காலரீதியிலும் திருத்தம் செய்யப்படாமை.

(ஆ) இந்த நிதியத்தின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாக சுங்க உத்தியோகத்தர்கள் தமது கடமைகளில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்படுகின்ற இடர்களுக்கு இழப்பீடு செலுத்துதல் இனங்காணப்பட்டிருந்தது. எனினும், பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட கடந்த 05 ஆண்டு காலப்பகுதியில் அவ்வாறான எந்தவொரு இழப்பீடு செலுத்துதலும் அறிக்கையிடப்படாதிருக்கும் போது தொடர்ச்சியாக இந்த நிதியத்திற்கு அசாதாரணமாக நிதி சேகரித்தல் கணக்காய்வின் போது கேள்விக்குரிய விடயமாக இருந்தது.

(இ) நிதியத்தின் பிரதான நோக்கங்களுக்கு புறம்பாக நடைமுறையல்லாச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் போன்ற செலவின விடயங்களுக்காக மீளாய்வாண்டின் போதும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய அரசாங்க நிதிச் சுற்றறிக்கை இலக்கம் PF/423 இன் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் என்பன கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2017 யூன் 06 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரம் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்வேறு சுங்கத் தவறுகளுக்காக விதிக்கப்பட்ட தண்டப்பணம் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைக்கின்ற பணத்தில் 20 சதவீதமான அளவு இந்த நிதியத்திற்கும், 50 சதவீதமான அளவு திரண்ட நிதியத்திற்கும், எஞ்சிய 30 சதவீத அளவு திரண்ட நிதியத்திற்கும் செலவு வைக்கப்படுகின்றது. மீளாய்வாண்டிற்காக சுங்க பரிசு வரி நிதியத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 1,750 மில்லியனாக இருந்தமையின் காரணமாக விகிதாசார ரீதியில் எடுக்கப்பட்ட முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 700 மில்லியனாக இருக்க வேண்டியிருந்தது. எனினும் மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது அது ரூபா 740 மில்லியனாக கருதப்பட்டமையின் காரணமாக முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 40 மில்லியனால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், நிதியத்தின் மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது தர்க்க ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

(ஆ) நிதியத்தின் ஐந்து செலவின விடயங்களுக்குரிய பாதீடு செய்யப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும் இடையே 62 சதவீதம் முதல் 1654 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டதுடன், இரண்டு வருமான விடயங்களுக்குரிய பாதீடு செய்யப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும் இடையே 57 சதவீதம் மற்றும் 37 சதவீதமான முரண்கள் காணப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- |
| (அ) வெளிநாட்டு பயிற்சி | வெளிநாட்டு பயிற்சி நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் போது முறையான திட்டமொன்று பின்பற்றப்படாமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் மற்றும் கிடைக்கப் பெற்ற நிதி என்பவற்றுக்கிடையே புலனாய்வு கோவைகளை ஒப்பீடு செய்வதற்காக முறையான திட்டமொன்று காணப்படாமை |
| (இ) கணக்கீடு | (i) கணக்கு வைத்தல் மற்றும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றாமை |
| | (ii) இலங்கை சுங்கத்தின் பிரதான கணக்குகளுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களுக்காக கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணிச்செல்லாமை. |
| | (iii) கணக்குகளின் மீதிகள் அதற்குரிய பட்டோலைகளுடன் இணக்கஞ் செய்யப்படாமை |